
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்





Vol: 02 | Issue: 109 | 4 Pages | 17.11.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 109 | 4 பக்கங்கள் | 17.11.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ**
**மன்னுயிர்க் கின்னா செயல்**

**விளக்கம்:**
தன் உயிருக்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், அத் துன்பத்தை மற்ற உயிருக்குச் செய்தல் என்ன காரணத்தாலோ.

## உலகின் 2வது பணக்காரருக்கு 60 வயதில் 2வது கல்யாணம்.. குஷியில் ஜெஃப் பெசோஸ்



அமெரிக்கா, நவ.17

உலக பணக்காரர் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கும் எலான் மஸ்க்குக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் 235 பில்லியன் டாலர் சொத்துடன் அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸ் உள்ளார். 60 வயதான ஜெஃப் பெசோஸ் தனது இரண்டாம் திருமணத்துக்குத் தயாராகி வருகிறார். தனது நீண்ட நாள் காதலியான 54 வயதாகும் தொலைக்காட்சி பிரபலம் லாரன் சான்செஸ் உடன் அவரது திருமணம் நடக்க உள்ளது.


இவர்கள் இருவருக்கும் அடுத்த மாதம் கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி திருமணம் நடைபெற உள்ளதாக அமெரிக்க இதழான தி சன் தெரிவித்துள்ளது. அமெரிக்காவில் இவர்கள் விடுமுறைக்கு வழக்கமாக ஆஸ்பென் நகருக்கு அடிக்கடி சென்று வருவர்.

இந்நிலையில் அந்த ஆஸ்பென் நகரில் வைத்தே தங்கள் திருமணத்தைப் பிரமாண்டமாக நடத்த இவர்கள் திட்டமிட்டுள்ளார்களாம். இந்த திருமண விழாவில் அமெரிக்க பிரபலங்கள் பலர் கலந்துகொள்ள உள்ளதாகவும் தி சன் இதழ் தெரிவித்துள்ளது.

The View, KTTV, Fox உள்ளிட்ட பிரபல தொலைக்காட்சி நிறுவனங்களில் தொகுப்பாளராக பணியாற்றிய லாரன் சான்செஸ் உடன் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் ஜெஃப் பெசோஸ் டேட்டிங் செய்து வருகிறார்.

ஜெஃப் பெசோஸ் தனது முதல் மனைவி மெக்கன்சி ஸ்காட் ஐ கடந்த 2018 ஆம் ஆண்டு விவாகரத்து செய்தார். விவாகரத்தின்மூலம் ஜெஃப் பெசோஸ் வைத்திருந்த கணிசமான பங்குகளை பெற்று மெக்கன்சி ஸ்காட் பில்லியனர் ஆனார்.

## 17 ஆயிரம் பேரை பணிநீக்கம் செய்யும் போயிங் ஊழியர்கள் அதிர்ச்சி




அமெரிக்கா, நவ.17

உலகின் முன்னணி விமான தயாரிப்பு நிறுவனமான போயிங் அதிரடி பணிநீக்க நடவடிக்கையை துவங்கியுள்ளது. உலகம் முழுக்க பணியாற்றி வரும் போயிங் ஊழியர்களில் 10 சதவீதம் பேர், சுமார் 17 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்ய போயிங் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த அறிவிப்பின் படி ஜனவரி மாத மத்தியில் பணிநீக்க நடவடிக்கை அமலுக்கு வரவுள்ளது.

பணிநீக்க நடவடிக்கையில் தெற்கு கரோலினா மற்றும் வாஷிங்டன் ஆலைகளில் பணியாற்றி வரும் ஊழியர்கள் பெருமளவு பாதிக்கப்படுகின்றனர். பணிநீக்க நடவடிக்கை தொடர்பாக போயிங் தலைமை செயல் அதிகாரி தனது ஊழியர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

அதில், "நாங்கள் ஏற்கனவே அறிவித்தப்படி நிதி சார்ந்த திட்டங்கள் மற்றும் முக்கியமானவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு ஏற்ற வகையில் ஊழியர்கள் எண்ணிக்கையை குறைக்கும் நடவடிக்கையை தொடர்கிறோம். சந்தையில் போட்டித்தன்மையை தொடர்வதற்கும், வாடிக்கையாளர்களுக்கு நீண்ட கால மதிப்புகளை வழங்குவதற்கும் இந்த நடவடிக்கை முக்கியமான ஒன்று ஆகும்," என குறிப்பிட்டுள்ளார்.

## போட்டிக்கு முன் எதிராளியை அறைந்த மைக் டைசன் வைரலாகும் வீடியோ



இர்விங், நவ.17

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள எர்லிங்டன் நகரில், தொழில்முறையிலான குத்துச்சண்டை போட்டி இன்று நடக்கிறது. இதில், அமெரிக்காவின் மைக் டைசன், ஜேக் பால் மோதுகின்றனர்.

முன்னாள் உலக 'ஹெவிவெயிட்' சாம்பியனான மைக் டைசன் (58 வயது), இதுவரை விளையாடிய 58 போட்டியில், 50ல் வெற்றி கண்டுள்ளார். இதில் 44 போட்டியில் எதிரணி வீரரை 'நாக்அவுட்' முறையில் வீழ்த்தினார். ஆறு போட்டியில் மட்டும் தோல்வியடைந்தார். எதிரணி வீரரின் காதை கடித்தது, பாலியல் பலாத்காரம், போதை பழக்கம் என பல சர்ச்சையில் சிக்கியதால் தொடர்ந்து போட்டியில் பங்கேற்கவில்லை. சுமார் 20 ஆண்டுகளுக்கு பின், மீண்டும் தொழில்முறை போட்டிக்கு திரும்பி உள்ளார்.

இவரை அமெரிக்காவை சேர்ந்த 'யூடியூப்' பிரபலம் ஜேக் பால் (27) எதிர்கொள்கிறார். இவர் கடந்த 2013 முதல் தொழில்முறையிலான குத்துச்சண்டை போட்டியில் பங்கேற்று வருகிறார். இதுவரை விளையாடிய 11 போட்டியில், 10ல் வெற்றி பெற்றார். இதில் 7 முறை 'நாக்அவுட்' முறையில் வெற்றி கண்டார்.

இருவருக்கு இந்திய நேரப்படி இன்று மாலை போட்டி நடைபெற உள்ளது. இந்த நிலையில் போட்டோசூட்டுக்காக இருவரும் ஒரே மேடையில் தோன்றினர். அப்போது மைக் டைசன் எதிரணி வீரரான ஜேக் பால் கன்னத்தில் பலார் என அறைந்தார். ஆனால் அவர் அறைந்ததை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் சிரித்தப்படி பால் இருந்தார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# அ.தி.மு.க. ஆட்சியின் திட்டங்களா?: சிரிக்காமல் பேட்டி அளிக்கிறார் இ.பி.எஸ்., மு.க.ஸ்டாலின்



அரியலூர், நவ.17

அரியலூர் மாவட்டம் கொல்லாபுரம் பகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.120 கோடி மதிப்பிலான 53 வளர்ச்சி திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். ரூ.88 கோடி மதிப்பில் 507 முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து அவர் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

★ ஒரு சிலரை போல டிவியில் பார்த்து பிரச்சனைகளை தெரிந்து கொள்பவன் அல்ல நான்.

★ தமிழக மக்கள் திமுக மீது வைத்துள்ள அன்பு எடப்பாடி பழனிசாமிக்கு கலக்கத்தை கொடுத்துள்ளது.

★ அதிமுக ஆட்சியில் பல திட்டங்களை கொண்டு வந்தது போல் சிரிக்காமல் பேட்டி அளித்துள்ளார்.

★ இபிஎஸ் நடத்திய முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம் வந்த முதலீடுகள் எவ்வளவு?

★ எப்போது முடியும் என தமிழர்கள் காத்திருந்த ஆட்சிதான் இபிஎஸ் ஆட்சி.

★ திட்டங்களுக்கு நிதி ஒதுக்கிவிட்டு ஓய்வு எடுக்க செல்பவன் நான் இல்லை.

★ பிரச்சனைகளை நேர்கொண்டு அதனை தீர்ப்பவன் நான், மக்களுக்காக பார்த்து பார்த்து திட்டம் தீட்டுபவன் நான்.

★ தேடி வந்து மனுக்கள் தரும் மக்களின் நம்பிக்கையை என்றும் காப்பாற்றுவேன் என உறுதி தருகிறேன்.

★ குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடுகளை போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

★ மிக மிக நலிந்த மக்களுக்கான ஆட்சியாக திமுக ஆட்சி இருக்க வேண்டும் என நினைக்கிறேன்.

★ உங்கள் குடும்பத்தின் ஒருவனாக இருந்து நலத்திட்டங்களை நிறைவேற்றுகிறேன் என்று கூறினார்.

# திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் புதிய வாக்காளர் சேர்ப்பு முகாம்



திருப்பூர், நவ.17

திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் புதிய வாக்காளர் சேர்ப்பு முகாம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது

தலைமைக் கழக அறிவிப்பின் அடிப்படையில், திருப்பூர் வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் செயலாளர் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினரான மரியாதைக்குரியக.செல்வராஜ்எம்எல்ஏஅவர்களின் நேரடி மேற்பார்வையில், 16.11.2024 சனிக்கிழமை காலை 9:40 மணிக்கு, 36.வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் புதிய வாக்காளர் சேர்ப்பு முகாம் நடைபெற்றது. நிகழ்வின் முக்கிய பங்கேற்பாளர்கள் திரு. மு. நாகராசன், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் மற்றும் அகில இந்திய தொழிலாளர் முன்னேற்ற சங்க துணைத் தலைவர் மியாமி ஆ. ஐயப்பன், கருவம்பாளையம் பகுதி செயலாளர் 37.வது வட்டக் கழக செயலாளர் ரவி (ராமகிருஷ்ணன்) தெற்கு மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கு. அரவிந்த்தெற்கு மாநகர மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் ராயபுரம் அமுதா தொழிலாளர் முன்னேற்ற சங்க மாநில பொதுச் செயலாளர் டாப்சா ஆறுமுகம். ஆய்வு செய்யப்பட்ட பகுதிகள் 1. பாகமன் 58: காதர் பேட்டை, எம். ஜி.ஆர் காலனி 2. பாகம் எண் 71: மிலிட்டரி காலனி 3. பாகம் எண் 74: சாயப்பட்டறை வீதி, பெட்டி செட்டிபுரம் 4. பாகம் எண் 75: சின்னா நகர், அருந்ததியர் காலனி 5. பாகம் எண் 76: அணை மேடு, அருந்ததியர் காலனி நியமிக்கப்பட்ட பாக முகவர்கள் எஸ். சாகுல் ஹமீது (ஆட்டோ) பி. பரமேஸ்வரி எஸ். சாரதா அ. ராமசாமி (ஆட்டோ) சி. முருகன் (அணைமேடு) செயல்பாடுகள் மற்றும் ஆய்வுகள்முகாமின் ஒரு பகுதியாக, பாகம் எண் 71, ஜெய் வாபாய் பள்ளி வளாகத்தில் புதிய வாக்காளர் சேர்ப்பதற்கான பணிகள் மதிப்பாய்வு செய்யப்பட்டன. முகவர்களின் ஒத்துழைப்புடன், மக்கள் பங்கேற்பை அதிகரிக்கவாக்காளர்பட்டியலில்பெயர் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்வு, மக்கள் வாக்குரிமையை உறுதிப்படுத்தவும், வாக்காளர் அடையாள அட்டைகள் சரியாகப் பதிவு செய்யவும் உறுதுணையாக அமைந்தது. சமூக முன்னேற்றம்மற்றும்மக்களுடன்தொடர்பு கொண்டு நடத்தப்பட்ட இந்நிகழ்வு திராவிட முன்னேற்ற கழகத்தின் செயல்பாடுகளை மேலும் உயர்த்துகிறது.

# செஞ்சி ஒன்றியத்தில் மக்களை தேடி இலவச இயன்முறை மருத்துவ முகாம்




செஞ்சி, நவம்பர் 17:

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியத்தில் சத்தியமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் காஞ்சிபுரம் மீனாட்சி இயன்முறை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இணைந்து மக்களுக்கு இலவச இயன்முறை (பிசியோதரபி) மருத்துவ முகாமை ஏற்பாடு செய்தனர்.

சத்தியமங்கலம் ஆரம்ப சுகாதார மைய இயன்முறை மருத்துவ அலுவலர் நாராயணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில், மீனாட்சி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் குழு செஞ்சி ஒன்றியத்தின் பொன்பத்தி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சென்று பொதுமக்களுக்கு இயன்முறை மருத்துவம் மற்றும் உடற்பயிற்சிகள் குறித்த பயிற்சிகளை வழங்கினர்.

இந்த முகாமின் முக்கிய அம்சமாக, அத்தியூர், கோனை, காரை, வரிகல், மீனம்பூர், சிட்டாம்புண்டி, ஆலம் பூண்டி, மற்றும் சத்தியமங்கலம் ஆகிய கிராமங்களில் பொதுமக்களுடன் நேரடியாக உரையாடி, இயன்முறை உடற்பயிற்சியின் தேவைகள் மற்றும் அதன் பயன்களை எடுத்துக்கூறினர்.

மீனாட்சி கல்லூரியின் மாணவர்கள், ஜோஸ்வா, ஜாய்சன் முகமது, ஆதில், இம்ரான், அகமது பாசிஸ், சூர்யா, சிவ கிருஷ்ணன், விஸ்வா, முத்துக்குமார் உள்ளிட்டோர் முகாமில் பங்கேற்று, சுமார் 500க்கும் மேற்பட்ட மக்களுக்கு இலவச பயிற்சிகளை வழங்கினர்.

# அனல்மின் நிலைய விரிவாக்கத்தினை முன்மொழிவது மக்கள் நலனுக்கு எதிரான நடவடிக்கை சீமான்

சென்னை, நவ.17

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO), திருவொற்றியூர் வட்டத்தில், எர்ணாவூர் கிராமத்திற்கு அருகில் தற்போதுள்ள வளாகத்திற்குள் 1x660 மெகாவாட் நிலக்கரி அடிப்படையிலான எண்ணூர் அனல்மின் நிலையம் (ETPS) விரிவாக்கத் திட்டத்தை அமைக்க முன்மொழிந்துள்ளது. பல்வேறு சூழலியல் சிக்கல்களுக்கு இடையே மீண்டும் ஒரு அனல்மின் நிலைய விரிவாக்கம் மீள முடியா சீரழிவு நிலைக்கு இட்டுச் செல்லும். சாம்பல் கழிவுகளால் மக்கள் குடியிருப்புகளையும், நீர் நிலைகளையும் ஒரு புறம் சீரழிப்பதோடு காற்று மாசின் காரணத்தினால் வாழ்வதற்குத் தகுதியற்றப் பகுதியாக வடசென்னையை அங்கு இருக்கக்கூடிய அனல் மின் நிலையங்கள் மாற்றி வருகின்றன. ஆண்டின் பெரும்பான்மை நாட்களில் காற்று மாசு விதிகள் குறிப்பிட்டுள்ள வரையறையைத் தாண்டி மாசு வெளியிடக் காரணமாக இருக்கக் கூடிய அனல் மின் நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனும் குரல் வலுத்து வரும் நிலையில் எவ்வித சூழலியல் மீட்பு குறித்தும் நடவடிக்கை எடுக்காமல் நிலையற்றப் பகுதியில் மேலும் ஒரு அனல் மின்நிலைய விரிவாக்கத்தினை முன்மொழிவது மக்கள் நலனுக்கும், சூழலியல் நலனுக்கும் எதிரான நடவடிக்கையாகும்.

நிலக்கரியைக் கொண்டு இயங்கக்கூடிய மின் உற்பத்தி முறைகளை உலக நாடுகள் கைவிட்டு வரும் நிலையில், இது தொடர்பான பன்னாட்டு ஒப்பந்தங்களில் இந்தியா கொடுத்துள்ள வாக்குறுதியினையும் பொருட்டாகக் கொள்ளாமல் தொடர்ந்து அனல் மின் நிலையங்களை அமைப்பது பன்னாட்டு விதிமீறலாகும். சென்ற 2022 ம் ஆண்டு இத்திட்டம் குறித்தப் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெறும் என்று கூறியிருந்த நிலையில் நான் உட்பட நாம் தமிழர் கட்சியினர் பெருந்திரளாகக் கலந்து கொள்வதாக அறிவித்தோம். பின்னர் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு இடையில் இத்திட்டம் குறித்த எவ்வித செய்திகளும் வராமல் இருந்தன. தற்போது மீண்டும் இத்திட்டத்திற்கான முயற்சிகள் நடைபெறுகிறது. தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம் ஏற்படும்போதெல்லாம் இத்திட்டம் இடைக்காலமாக நிறுத்தி வைக்கப்படுவதும், மீண்டும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதும் மாறி மாறி அரங்கேறுவது, அடிப்படையில் மக்கள் நலனைக் கருத்தில் கொள்ளாமல் தனிநபர் நோக்கங்களோடு இத்திட்டம் முன்மொழியப் படுகிறதோ என்ற சந்தேகமும் எழுகிறது.

இதுவரை ஏற்படுத்திய சூழலியல் சீரழிவுகளுக்குப் போதிய தீர்வின்றித் தமிழ்நாடு அரசு இருக்கும் நிலையில் மேலும் சூழலியல் சீரழிவுக்கு வித்திடக்கூடிய இது போன்ற திட்டங்களுக்கு ஒரு போதும் மக்கள் அனுமதி வழங்கப்போவதில்லை. ஏற்கனவே பரந்தூர், கன்னியாகுமரி என்று பல்வேறு பகுதிகளில் மக்களின் எதிர்ப்பின் நடுவே திட்டங்களை முன்மொழிந்து வரும் நிலையில், மேலும் மக்கள் எதிர்ப்பிற்கு உள்ளாகாமல்

இத்திட்டத்திற்கான முன்மொழிவினை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று தமிழ்நாடு அரசினை வலியுறுத்துகின்றேன். மேலும், பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் குரல் ஓங்கி ஒலிக்கும் என்றும் அறிவிக்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பலத்த காற்று வீசுவதால் வேதாரண்யம் மீனவர்கள் மீன் பிடிக்க செல்லவில்லை

வேதாரண்யம், நவ.17

வளிமண்டல மேலடுக்கு சுழற்றி காரணமாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது. மேலும் கடற்கரை பகுதிகளில் பலத்த காற்று வீசுகிறது.

இந்த நிலையில் நாகை மாவட்டம் வேதாரண்யம் கடல் உள்பகுதிகளில் வழக்கத்தை விட அதிகளவில் பலத்த காற்று வீசி வருகிறது.



இதனால் ஆறுகாட்டுதுறை, புஷ்பவனம், வெள்ளப்பள்ளம் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் சுமார் 5000 மீனவர்கள் இன்று மீன் பிடிக்கச் கடலுக்கு செல்லவில்லை.

இதனால் 1000க்கும் மேற்பட்ட பைபர் படகுகள் பாதுகாப்பாக கரையோரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் பரபரப்பாக காணப்படும் கடற்கரை பகுதி மீனவர்கள் மீன்பிடிக்க செல்லாததால் வெறிச்சோடி காணப்படுகிறது.


# கோவையில் லாட்டரி அதிபர் மார்ட்டின் வீடு உள்பட 5 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை

கோவை, நவ.17

கோவையை சேர்ந்தவர் தொழில் அதிபர் மார்ட்டின். இவர் பல்வேறு மாநிலங்களில் லாட்டரி விற்பனையில் முக்கிய பங்கு வகித்து வருகிறார்.

அவர் லாட்டரி விற்பனையில் முறைகேடு செய்து ரூ.910 கோடியை பல்வேறு நிறுவனங்களில் முதலீடு செய்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக அமலாக்கத்துறை அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அத்துடன் மார்ட்டினின் ரூ.450 கோடி அசையா சொத்துக்களை அமலாக்கத்துறை ஏற்கனவே முடக்கி இருக்கிறது. இதற்கிடையே கடந்த ஆண்டு மே மற்றும் அக்டோபரில் கோவை, சென்னையில் உள்ள மார்ட்டின், அவருடைய மருமகன், உறவினர்கள் வீடுகளில் சோதனை நடந்தது.

இந்த சோதனையில் சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிகிறது.



இந்த ஆவணங்களின் அடிப்படையில் நேற்று சென்னை மற்றும் கோவை துடியலூர் அருகே உள்ள வெள்ளக்கிணர் பகுதியில் இருக்கும் மார்ட்டின் வீடு, அலுவலகம் மற்றும் அவர் நடத்தி வரும் ஹோமியோபதி கல்லூரி உள்பட 7 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடந்தது.

காலையில் தொடங்கிய சோதனையானது இரவு தாண்டியும் நீடித்தது.

இன்று காலை 2வது நாளாக, வெள்ளக்கிணர் பகுதியில் உள்ள மார்ட்டின் வீட்டில் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டனர். சோதனையையொட்டி அவரது வீட்டின் நுழைவு வாயில் யாரும் உள்ளே நுழைய முடியாதபடி பூட்டப்பட்டது. வீட்டில் உள்ள ஒவ்வொரு அறைகளிலும் இன்றும் சோதனை மேற்கொண்டனர்.

இதேபோல் வீட்டின் அருகே உள்ள அலுவலகம் மற்றும் மார்ட்டின் நடத்தி வரக்கூடிய ஹோமியோபதி கல்லூரியிலும் 2வது நாளாக சோதனை நடந்தது.

கல்லூரியில் உள்ள அலுவலக அறைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் அலசி ஆராய்ந்து சோதனை மேற்கொண்டனர். தொடர்ந்து சோதனையானது நடைபெற்று வருகிறது.


இதற்கிடையே சரவணம்பட்டி மற்றும் சாய் பாபாகாலனியில் உள்ள மார்ட்டினின் உறவினர்கள் 2 பேர் வீட்டில் இன்று அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

சோதனையில் அமலாக்கத்துறை அதிகாரிகளுக்கு சில ஆவணங்கள் கிடைத்து இருப்பதாக கூறப்படுகிறது. இருந்த போதிலும் என்னென்ன ஆவணங்கள் கிடைத்தது என்பது உறுதியாக தெரியவில்லை.

இந்த வழக்கு தொடர்பான சோதனைகள் முழுமை அடைந்த பின்னர் என்னென்ன ஆவணங்கள் சிக்கின என்ற அதிகாரபூர்வ தகவலை அமலாக்கத்துறை தரப்பில் வெளியிடப்படும் என்று தெரிகிறது.

சோதனையையொட்டி, சோதனை நடைபெற்று வரும் 3 இடங்களில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# களக்காடு தலையணையில் நீர்வரத்து அதிகரிப்பு: மணிமுத்தாறில் குளிக்க தடை



நெல்லை, நவ.17

நெல்லை மாவட்டம் மாஞ்சோலை வனப்பகுதி இந்தியாவிலேயே அதிகம் மழைப்பொழிவு பெறும் வனப்பகுதியாகும். இங்கு நேற்று முன்தினம் இரவு திடீரென மழை பெய்ய தொடங்கியது. அங்குள்ள காக்காச்சி, நாலுமுக்கு, ஊத்து உள்ளிட்ட இடங்களில் இரவு முழுவதும் மழை நீடித்தது.

நேற்றும் பகலில் தொடங்கி இன்று காலை வரையிலும் நாலுமுக்கு, ஊத்து பகுதியில் பலத்த மழை பெய்தது. காக்காச்சி பகுதியில் பரவலாக மழை பெய்தது.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ஊத்து எஸ்டேட்டில் 10.1 சென்டிமீட்டரும், நாலுமுக்கில் 9.6 சென்டிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

இதேபோல் மாஞ்சோலை, காக்காச்சி தேயிலை தோட்ட பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது. மாஞ்சோலையில் 8 சென்டிமீட்டரும், காக்காச்சியில் 9 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நேற்று மணிமுத்தாறு அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இன்றும் அங்கு மழை பெய்து வருவதால் 2வது நாளாக சுற்றுலாப் பயணிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை வனத்துறை நீட்டித்துள்ளது.

களக்காடு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக களக்காடு தலையணை சூழல் சுற்றுலா பகுதியில் தலையணையில் நீர்வரத்து அதிகரிப்பின் காரணமாக சுற்றுலாப் பயணிகள் தலையணையில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் சுற்றுலா பயணிகள் பார்வையிட மட்டும் அனுமதி வழங்கப்படுகிறது.

# தேனியில் மீண்டும் மழை வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி

கூடலூர், நவ.17

தேனி, திண்டுக்கல் உள்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. தேனி மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக மழை ஓய்ந்திருந்த நிலையில் மீண்டும் பெய்யத் தொடங்கி உள்ளது.

பூர்வீக பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இதனால் அணையின் நீர் மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. 65 அடி வரை உயர்ந்த நீர் மட்டம் தற்போது 61.12 அடியாக



குறைந்துள்ளது. மீண்டும் மழை பெய்யத் தொடங்கி உள்ளதால் அணைக்கு நீர் வரத்து 848 கன அடியில் இருந்து 1156 கனஅடியாக உயர்ந்துள்ளது.

மதுரை மாநகர குடிநீர் மற்றும் பாசனத்திற்காக 3699 கன அடி நீர் திறக்கப்படுகிறது. இன்று காலையும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதால் மழை தொடரும் என்ற நம்பிக்கையில் மும்முரமாக விவசாய பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 123.40 அடியாக உள்ளது. அணைக்கு 534 கன அடி நீர் வருகிற நிலையில் 1105 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. 3301 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 54.55 அடியாக உள்ளது. 65 கன அடி நீர் வருகிற நிலையில் 100 கன அடி நீர் திறக்கப்படுகிறது. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 126.28 அடியில் நீடிக்கிறது. வரத்தும், திறப்பும் 34.29 கன அடி.

ஆண்டிபட்டி 4.2, அரண்மனைபுதூர் 0.6, பெரியகுளம் 12.4, சோத்துப்பாறை 5.2, வைகை அணை 1.4, உத்தமபாளையம் 0.8, கூடலூர் 3.6, பெரியாறு அணை 2.4, தேக்கடி 4.4, சண்முகாநதி அணை 4.2 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது.

# நடுரோட்டில் திடீரென தீப்பிடித்து எரிந்த லாரி

தஞ்சாவூர், நவ.17

காரைக்காலில் இருந்து 35 டன் நிலக்கரியை ஏற்றிக்கொண்டு டாரஸ் லாரி ஒன்று பெரம்பலூருக்கு புறப்பட்டது. லாரியை மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே ஓதவந்தான் குடிகாட்டை சேர்ந்த அந்தோணி ஆனந்தராஜ் (வயது 40) என்பவர் ஓட்டி வந்தார்.

வரும் வழியில் திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் அருகே கோவில்வெண்ணி சுங்கச்சாவடி அருகில் லாரி டயர் பஞ்சர் ஆனது. இதனை சரி செய்து விட்டு அந்தோணி ஆனந்தராஜ் லாரியை தஞ்சாவூர் நோக்கி ஓட்டி வந்தார். நள்



ளிரவில் தஞ்சை மாரியம்மன் கோவில் எதிரில் வந்த போது சாலையில் வைக்கப்பட்டிருந்த பேரிகார்டு அருகில் டிரைவர் அந்தோணி ஆனந்தராஜ் பிரேக் அடித்துள்ளார். அப்பொழுது திடீரென லாரி டயர்கள் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது.

புகை வருவதை கண்டவுடன் லாரியிலிருந்து அந்தோணி ஆனந்தராஜ் உடனடியாக இறங்கி குதித்தார். 10 டயர்களும், டீசல் டாங்கும் பற்றி எரிய ஆரம்பித்தது. லாரியில் ஏற்றி வந்த நிலக்கரியும் தீப்பிடிக்க அதில் இருந்து அதிக புகை வந்தது. அந்த பகுதியே தீப்பிளம்பாகவும், புகை மூட்டமாகவும் காட்சியளித்தது.

இது பற்றி தகவல் அறிந்த தஞ்சாவூர் தீயணைப்பு துறை வீரர்கள் விரைந்து வந்து தண்ணீர் பீய்ச்சி அடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இருந்தாலும்பாதி அளவு நிலக்கரி எரிந்து சாம்பலானது. லாரியின் பெரும்பகுதியும் சேதமானது. இது குறித்து தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஒருமையில் பேசிய அதிகாரியை கண்டித்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம் முன்பு ஆசிரியர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

தருமபுரி, நவ.17

ஆசிரியர்களை தகாத வார்த்தையால் பேசும் தருமபுரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதி சந்திராவை கண்டித்து தமிழ்நாடு மேல்நிலை பள்ளி முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்ட தலைவர் ஆறுமுகம் தலைமையில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதுகுறித்து மாவட்ட தலைவர் ஆசிரியர் ஆறுமுகம் கூறியதாவது:

தருமபுரி மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முதுகலை பட்டதாரி



ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்த ஆசிரியர்களை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆய்வின் போது, ஆசிரியர்களை ஒருமையில் பேசுவது, ஆசிரியர்களின் பிறப்பை தவறாக பேசுவது, அதே நேரத்தில் ஆசிரியர்களுக்கு தேவையான அரசு வழங்கப்பட்டுள்ள தற்செயல் விடுப்புகளை கணக்கிட்டு அதிக தற்செயல் விடுப்பு எடுக்கக்கூடிய ஆசிரியர்களை தனியாக அழைத்து ஒருமையில் திட்டி வருகிறார்.

பல்வேறு ஆசிரியர்களின் வேதனை தெரிவித்ததன் காரணமாக இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும், முதன்மைக் கல்வி அலுவலர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களைசந்திக்கும்வரை காத்திருப்பு போராட்டம் தொடரும் என தெரிவித்தார்.

இதுகுறித்துதகவலறிந்த தருமபுரி போலீசார் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து போராட்டக்காரர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது அதிகாரிகள் இதுகுறித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததின் பேரில் நள்ளிரவில் காத்திருக்கும் போராட்டத்தை கைவிட்டு ஆசிரியர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இந்த சம்பவம் தருமபுரியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# முதலீடு தொகைக்கு கூடுதல் லாபம் கிடைக்கும் என கூறி திருப்பூர் பெண்ணிடம் ரூ.17¾ லட்சம் மோசடி

திருப்பூர், நவ.17

திருப்பூர் அங்கேரிபாளையம் பகுதியை சேர்ந்தவர் பிரதீபா (42). இவருக்கு கடந்த மே மாதம் பல்வேறு எண்களிலிருந்து வாட்ஸ் அப் மூலம் அழைப்பு வந்துள்ளது. அதில் பேசிய நபர்கள் இந்திய பணத்தை அமெரிக்க டாலர் மதிப்பில் முதலீடு செய்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்கும் எனக் கூறினர். இதைத்தொடர்ந்து அவருடைய செல்போன் எண்ணுக்கு லிங்க் அனுப்பப்பட்டது. அதில் பயணர் ஐ.டி, கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்கி பிரதீபா உள்ளே சென்றுள்ளார். தொடர்ந்து குறிப்பிட்ட வங்கி கணக்கை அனுப்பி அதில் பணத்தை முதலீடு செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

இதை நம்பிய பிரதீபா, இந்திய பணத்தை குறிப்பிட்ட வங்கி கணக்கில் முதலீடு செய்துள்ளார். அதற்கு கணிசமான லாபம் என குறுஞ்செய்தி வந்துள்ளது. தொடர்ந்து படிப்படியாக ரூ.17 லட்சத்து 85 ஆயிரத்தை பிரதீபா முதலீடு செய்துள்ளார்.

அதற்கான லாபத்துடன் பணத்தை எடுக்க முயன்ற போது, மேலும் 2,500 அமெரிக்க டாலர் மதிப்பிலான பணத்தை செலுத்தினால் தான் பணத்தை எடுக்க முடியும் என்று கூறியுள்ளனர். அதன்பிறகே தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த பிரதீபா திருப்பூர் மாநகர சைபர் கிரைம் போலீசில் புகாரளித்தார். இதுதொடர்பாக மாநகர சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# டிஜிட்டல் பயிர் சர்வே பணியில் மாணவர்களை ஈடுபடுத்தக்கூடாது ராமதாஸ்

சென்னை, நவ.17

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருத்தணி அருகே டிஜிட்டல் பயிர் சர்வே பணியில் ஈடுபட்டிருந்த வேளாண்மாணவர்களும், அதிகாரிகளும் கணக்கெடுப்புக்காக அங்கு சட்ட விரோதமாக நடத்தப்பட்டு வரும் கல்குவாரிக்கு அருகில் உள்ள நிலத்திற்கு சென்றபோது, அங்கிருந்த குண்டர்களால் சுற்றி



வளைத்துத் தாக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து பல மணி நேரம் சிறைவைக்கப்பட்ட அவர்கள் பின்னர் அதிகாரிகளின் தலையீட்டால் மீட்கப்பட்டுள்ளனர்.

டிஜிட்டல் பயிர் சர்வே பணிகளில் வருவாய்த் துறை அதிகாரிகளை ஈடுபடுத்துவதற்கு பதிலாக வேளாண் கல்லூரி மாணவ, மாணவியர் ஈடுபடுத்தப்படுவதை தொடக்க நிலையிலேயே பாட்டாளி மக்கள் கட்சி கடுமையாக எதிர்த்தது. டிஜிட்டல் பயிர் சர்வே பணிகள் மத்திய அரசால் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு தனியார் நிறுவனங்கள் மூலமாகவோ, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதன் மூலமாகவோ தான் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆபத்தான சூழலில் வேளாண் மாணவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்துவது தேவையற்ற பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். எனவே, டிஜிட்டல் பயிர் சர்வே பணிகளில் இருந்து மாணவர்களை அரசு விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# போலீஸ் அதிகாரி எனக்கூறி வாகனங்களை ஆய்வு செய்த வாலிபர் எச்சரித்து அனுப்பிய போலீசார்

தேனி, நவ.17

தேனி மாவட்டம் வீரபாண்டி அருகே வாக்கி டாக்கியை வைத்துக் கொண்டு தான் போலீஸ் அதிகாரி என கூறி ஒருவர் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தார். ஆனால் அவரது நடவடிக்கையில் பொதுமக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

இதனையடுத்து அவரது புகைப்படத்தை எடுத்து தேனி காவல் துறை கட்டுப்பாட்டு அறைக்கு பொதுமக்கள் அனுப்பி வைத்தனர். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வீரபாண்டி போலீஸ் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் கோபால் தலைமையில் அங்கு போலீசார் வந்தனர்.

அவர்கள் வாகன தணிக்கையில் ஈடுபட்ட நபரிடம் விசாரணை நடத்திய போது அவர் முன்னுக்கு பின் முரணான தகவல் அளித்தார். மேலும் அவர் குடிபோதையில் இருந்ததும் தெரிய வந்தது.

தொடர்ந்து நடத்திய விசாரணையில் அவர் அல்லிநகரத்தைச் சேர்ந்த வீனஸ் கண்ணன் என தெரிய வரவே போலீசார் அவரிடம் எச்சரிக்கை செய்து இனி இது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது என எழுதி வாங்கிக் கொண்டு அனுப்பி வைத்தனர்.



இச்சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. ஏற்கனவே கடந்த சில மாதங்களுக்கு முன்பு கம்பம் பஸ் நிலையத்தில் கண்டக்டர் சீருடையுடன் ஒருவர் பயணிகளுக்கு டிக்கெட்டுகளை கொடுத்துவிட்டு பணத்துடன் தப்பிச் சென்ற சம்பவத்தில் ஒருவரை கைது செய்தனர்.

அதே போன்று மீண்டும் போலி அதிகாரி என கூறி வாகன தணிக்கையில் ஈடுபட்ட சம்பவமும் பொதுமக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# எலி மருந்து இருவரது உடல்நிலையில் முன்னேற்றம் என மருத்துவமனை நிர்வாகம்




சென்னை, நவ.17

சென்னை குன்றத்தூரில் வசிப்பவர் கிரிதரன். இவர் தனது மனைவி பவித்ரா மற்றும் விஷாலினி (6 வயது), சாய் சுதர்சன் (4 வயது) ஆகிய 2 குழந்தைகளுடன் வசித்து வந்தனர்.

அவர்களது வீட்டில் எலி தொல்லை அதிகமாக இருந்ததால் எலி மருந்து, எலிபேஸ்ட் ஆகியவற்றை அதிகமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்பு வீட்டிற்குள் வைக்கப்பட்ட எலி மருந்தின் நெடி, வீடு முழுவதும் பரவியுள்ளது. இதனை சுவாசித்த நால்வருக்கும் மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. இதில், 2 குழந்தைகள் மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளனர்.


குழந்தையின் பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக எலியை கட்டுப்படுத்த மருந்து வைத்த Pest Control நிறுவனம் மீது வழக்கு பதிந்துள்ள போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ள கிரிதரன், பவித்ரா இருவரின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

இருப்பினும் அவர்கள் இருவரும் மேலும் இரண்டு நாட்களுக்கு ஐசியுவில் கண்காணிக்கப்பட வேண்டும் என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# அரசு நிகழ்ச்சிகளில் எங்கள் பெயர்கள் இடம் பெறுவதில்லை அமைச்சர் முன்னிலையில் ஷா நவாஸ் வேதனை



நாகை, நவ.17

நாகை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டார்.

அந்த நிகழ்ச்சியில் நாகை சட்டமன்ற தொகுதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எம்.எல்.ஏ. ஆளூர் ஷா நவாஸ் கலந்து கொண்டு பேசியதாவது:

கடந்த வாரம் நகராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினரின் பெயர், பாராளுமன்ற உறுப்பினரின் பெயர் இடம் பெறவில்லை.

எங்கோ ஒரு மூலையில் ஒரு அதிகாரிகள் செய்யக் கூடிய சிறு தவறு எங்கே போய் முடிகிறது என்று பார்க்க வேண்டும்.

அதை எடுத்து வைத்து சமூக வலைதளங்களில் எப்படி சித்தரிக்கப்பட்டது என்று பார்க்க வேண்டும்.

ஏற்கனவே இந்த கூட்டணியை எப்படியாவது உடைத்து விட முடியாதா? ஏதாவது ஒரு சிக்கலை ஏற்படுத்தி விட முடியாதா? என்று வெளியே இருக்கும் சக்திகள் கண்ணும் கருத்துமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி இங்கே யாரோ ஒரு அதிகாரி செய்யும் பிழை திட்டமிட்டு இந்த அரசே இப்படி செய்கிறது என்கிற ஒரு தோற்றத்தை கொடுத்து விடும்.

இதுதான் திராவிட மாடலா? இதுதான் சமூக நீதியா? என்று கேள்விகள் வருகிறது.

தேவையில்லாமல் அரசுக்கும் நம்முடைய நிர்வாகத்திற்கும் ஒரு நெருக்கடியை அதிகாரிகள் செய்யும் தவறால் ஏற்பட்டு விடுகிறது.

சட்டமன்ற உறுப்பினரின் பெயர் என்பது மக்கள் பிரதிநிதியின் பெயர். ஏதோ எங்கள் பெயர் வரவேண்டும் என்பதற்காக நாங்கள் இதை சொல்லவில்லை.

பேனர் வைப்பதால் எங்களுக்கு புகழ் வெளிச்சம் கிடைத்து விடப்போவதில்லை. அப்படி ஒரு புகழ் வெளிச்சத்திற்கான தேவையும் எங்களுக்கு தேவை இல்லை.

எங்கள் பெயர் இடம் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு நாங்கள் சொல்லவில்லை. அதற்கு பின்னால் இருக்கக்கூடிய சுயமரியாதை என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இது அரசுக்கு இழுக்கை ஏற்படுத்திக்கொடுக்கக்கூடிய, அவப்பெயரை ஏற்படுத்தக்கூடிய செயலை ஏதோ ஒரு மூலையில் இருந்து செய்துவிட்டு போகிறீர்கள்.

அது தேவையில்லாமல் வேறு வேறு வகையில் எதிரொலிக்கிறது என்பதை கவனத்தில் கொண்டு, இனிமேல் ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதாக இருந்தால் நெறிமுறை பின்பற்றுங்கள். இனிமேல் இது போல் தவறுகள் நிகழாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறினார்.

# விஜய் கட்சியில் புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 1 கோடியை நெருங்கியது: தி.மு.க., அ.தி.மு.க. அதிர்ச்சி



சென்னை, நவ.17

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் அரசியல் பயணத்தை தொடங்கினார்.

கட்சி கொள்கைகள், திட்டங்கள்பற்றி அறிக்கை வெளியிட்ட விஜய், 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல்தான் இலக்கு. முன்னதாக கட்சியின் ஆரம்ப கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். முதல் கட்டமாக கட்சிக்கு புதிய உறுப்பினர்கள் சேர்க்கையை தீவிரப்படுத்த வேண்டும் என அறிவித்தார்.

விஜய்யின் அறிவிப்பு கட்சி தொண்டர்கள் மட்டுமின்றி பல்வேறு தரப்பினரிடமும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உறுப்பினர் சேர்க்கைக்காக சிறப்பு செயலி உருவாக்கப்பட்டு ஆன்லைன் மூலம் புதிய உறுப்பினர் சேர்க்கை நடைபெற தொடங்கியது.

புதிய உறுப்பினர்கள் சேர்க்க தொடங்கிய சில தினங்களிலேயே லட்சக்கணக்கானோர் கட்சியில் புதிதாக உறுப்பினர்களாக சேர தொடங்கினர். கட்சியில் இளைஞர்களும், இளம் பெண்களும் அதிகமாக சேர்ந்தனர்.

ஒரே நாளில் ஒன்று போல் கட்சியில் இணைவதற்கு முயற்சிப்பதால் இணைய தள சர்வர் முடங்கியது.

இதையடுத்து சில நாட்கள் உறுப்பினர்கள் சேர்க்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் சர்வர் சரி செய்யப்பட்டு உறுப்பினர் சேர்க்கை பணி தொடங்கியது.

இதையடுத்து கட்சியில் சேர்ந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 75 லட்சத்தை அடைந்தது.

இந்த நிலையில் கட்சி தலைவர் விஜய் கட்சி கொடியை பனையூரில் உள்ள தலைமை அலுவலகத்தில் அறிமுகப்படுத்தினார். தொடர்ந்து விக்கிரவாண்டி வி.சாலை என்ற இடத்தில் கடந்த 27ந்தேதி மாநாடு நடந்தது.

லட்சக்கணக்கானோர் திரண்ட இந்த மாநாடு தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை உருவாக்கியது.

மாநாட்டில் விஜய்யின் அதிரடி பேச்சு கட்சி தொண்டர்கள் மட்டுமின்றி பொது மக்களிடையேயும் பெரும் வரவேற்பை பெற்றது.

இதைத் தொடர்ந்து கட்சியில் புதிதாக சேர்வதற்கு ஏராளமானோர் ஆர்வம் காட்டி கட்சியில் இணைய தொடங்கினர். இதையடுத்து கட்சியில் புதிதாக இணைந்தவர்களின் எண்ணிகை 93 லட்சத்தை அடைந்தது.

இந்த நிலையில் ஒரே நாளில் ஏராளமானோர் விண்ணப்பித்ததால் மீண்டும் தமிழகம் முழுவதும் 'சர்வர்' முடங்கியது. இதனால் உறுப்பினர் சேர்க்கை பணியில் தடை ஏற்பட்டது.

இதையொட்டி படிப்படியாக இணைய தள செயலியின் சர்வர் சரி செய்யப்பட்டு மீண்டும் கட்சியில் பலர் புதிதாக இணைய தொடங்கினர். இதையடுத்து தமிழக வெற்றிக் கழகத்தில் புதிதாக சேர்ந்தோர் எண்ணிக்கை இன்னும் சில தினங்களில் 1 கோடியை நெருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய் கட்சி தொடங்கி சில மாதங்களில் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 1 கோடி நெருங்கி இருப்பது தி.மு.க., அ.தி.மு.க. மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# அரசு ஊழியர்கள் கோரிக்கையை நிறைவேற்றாமல் இருப்பதா? ஓ.பன்னீர்செல்வம் கடும் கண்டனம்



சென்னை, நவ.17

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் புதிய ஓய்வூதியத் திட்டம் கைவிடப்பட்டு பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆட்சிக்கு வந்து மூன்றரை ஆண்டுகள் கடந்த நிலையிலும், ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு புதிய வரிகள் மூலம் அரசின் வருமானம் அதிகரிக்கப்பட்ட நிலையிலும், இந்த கோரிக்கையை நிறைவேற்றாது தி.மு.க. அரசு காலத்தைக் கடத்துவதைப் பார்த்தால், இந்த கோரிக்கை நிறைவேறாதோ என்ற அச்சம் தான் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் நிலவுகிறது. தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாத தி.மு.க. அரசுக்கு முதலில் எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மை நிலையை புரிந்து கொள்ளாமல், "வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ" என்பதற்கேற்ப அ.தி.மு.க. ஆட்சியின் மீது பழிபோடாமல், பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை தி.மு.க. அரசு விரைந்து எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தீபாவளி பண்டிகை காலங்களில் தனியார் பஸ்களை பயன்படுத்தியதால் அரசுக்கு ரூ.50 கோடி இழப்பு

சென்னை, நவ.17

தனியார் பஸ்களை பயன்படுத்தியதால் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.50 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கருக்கு, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து ஊழியர் சம்மேளனம் (சி.ஐ. டி.யு.) பொதுச் செயலாளர் ஆறுமுக நயினார் அனுப்பி உள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

அரசு போக்குவரத்து கழகங்கள் தமிழகத்தின் மிகப் பெரிய சேவை நிறுவனமாகும். தினமும் 1.75 கோடி மக்கள் அரசு பஸ்களை பயன்படுத்தி வருகின்றனர். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் திருவிழாக்கள், பருவகால நிகழ்வுகள். பண்டிகைகள் போன்றவற்றிற்கு சிறப்பு பஸ்களை இயக்கி வருகின்றன. ஆனால், நீண்ட காலமாக உள்ள இரு நடைமுறை சமீபத்தில் மாற்றப்பட்டுள்ளது. ஆயுதபூஜை மற்றும் தீபாவளியையொட்டி சிறப்பு இயக்கத்திற்கு தனியார் பஸ்களை வாடகைக்கு எடுத்து இயக்கும் நடைமுறை புகுத்தப்பட்டுள்ளது. இது எவ்விதத்திலும் சரியற்றது. தனியார் பஸ்களை வாடகைக்கு எடுப்பதற்கு கீழ்கண்ட இரண்டு காரணங்கள் சொல்லப் பட்டது:

1. போக்குவரத்து பஸ்கள் சிறப்பு இயக்கத்திற்கு பயன்படுத்தினால் 1 கிலோ மீட்டருக்கு ரூ.90 வரை செலவாகும். தனியார் பஸ்சை இயக்கும்போது கிலோ மீட்டருக்கு ரூ.51.25 பைசா மட்டும் கொடுத்தால் போதும். இதனால் இழப்பு தவிர்க்கப்படும்.

2. சிறப்பு இயக்கத்தையொட்டி பஸ்களின் வழித்தடத்தை மாற்றி இயக்கும் போது அன்றாடம் உபயோகிக்கும் பயணிகள் பாதிக்கப்படுவர்.

மேற்கண்ட இரண்டு காரணங்களும் சரியற்றது என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

அரசு பஸ்களை இயக்கினால் ரூ.90 செலவாகும் என்பது சரியற்றது.

தற்போது பல கழகங்களில் கிலோ மீட்டருக்கான இயக்க செலவு ரூ.65 மட்டுமே செலவாகிறது. வாதத்திற்காக ரூ.90 செலவாகும் என்று எடுத்துக் கொண்டாலும், பஸ் இயக்கத்தில் மாறும் செலவீனம் நிரந்தர செல்வீனம் என்ற 2 வகையான செலவீனங்களும் உள்ளது.

தனியார் பஸ்களை இயக்கினாலும் நிரந்தர செலவீனத்தில் எவ்வித மாறுபாடும் ஏற்படாது மாறும் செலவீனம் மட்டுமே மிச்சமாகும் மாறும் செலவீனம் தற்போது கிலோ மீட்டருக்கு சுமார் ரூ.18 ஆகிறது தனியார் பஸ்கள் இயக்குவதால் ரூ.18 மட்டுமே மிச்சமாகும் அதேசமயம், சிறப்பு இயக்கத்தின் மூலம் 1 கிலோமீட்டருக்கு ரூ.30க்கு மேல் வருவாய் வரும். எனவே, சிறப்பு இயக்கம் இயக்குவதன் மூலம் 1 கிலோமீட்டருக்கு ரூ.12 கழகத்திற்கு வருவாய் கிடைக்கும் இவ்வாறு வருவாய் கிடைப்பதை தவிர்த்துவிட்டு, தனியார் பஸ்களை இயக்கியதன் மூலம் சுமார் ரூ.50 கோடி கழகங்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே, நீதி நெருக்கடியில் உள்ள போக்குவரத்து கழகங்கள் தேவையற்ற முறையில் ரூ.50 கோடி இழப்பு ஏற்படுவது எவ்விதத்திலும் நியாய மற்றது.

போக்குவரத்து கழகங்களில் கடந்த 2017ம் ஆண்டு வரை ஒரு நாளில் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 10 லட்சம் பேர். தற்போது பயணம் செய்பவர்கள் கோடியே 75 லட்சம் பேர். 2 கோடிக்கு மேற்பட்ட பயணிகளை அன்றாடம் கையாண்ட போக்குவரத்து கழகங்களால் 1 கோடியே 75 லட்சம் பயணிகளை கையாள முடியாது என கூறுவதே சரியற்றது. எனவே. மேலே கூறியு உள்ள விஷயங்களைப் பரிசீலித்து தமிழகத்தின் சிறப்புக்குரிய பொதுத் துறை நிறுவனமான போக்கு வரத்துக் கழகங்களை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# சென்னை விமான நிலையத்தில் 10 விமானங்கள் திடீர் ரத்து: பயணிகள் அவதி




சென்னை, நவ.17

சென்னை விமான நிலையத்தில் எந்த விதமான முன்னறிவிப்பும் இல்லாமல் பத்து விமானங்கள் ரத்து செய்யப்பட்ட சம்பவம் பயணிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. உள்நாட்டு விமான நிலையத்தில் இன்று ஒரே நாளில் பத்து ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

எந்த வித முன்னறிவிப்பும் இன்றி, திடீரென விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் அவதியுற்றனர். சென்னையில் இருந்து கொல்கத்தா, புவனேஸ்வர், பெங்களூரு, திருவனந்தபுரம், சிலிகுரி செல்ல இருந்த 5 புறப்பாடு விமானங்களும் ஐந்து இடங்களில் இருந்து சென்னை வர இருந்த வருகை விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

விமானம் திடீரென ரத்து செய்யப்பட்டது குறித்து சென்னை விமான நிலையத்தில் உள்ள ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான கவுண்டர்களில் பயணிகள் தகவல் கேட்டுள்ளனர். எனினும், விமான நிறுவனம் சார்பில் எந்தவித முறையான பதில் வழங்கப்படவில்லை என பயணிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# பூண்டி ஏரிக்கு நீர் வரத்து 460 கன அடியாக அதிகரிப்பு



ஊத்துக்கோட்டை, நவ.17

சென்னை நகர மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக பூண்டி ஏரி உள்ளது. இந்த ஏரியின் உயரம் 35 அடியாகும். இதில் 3.231 டி.எம்.சி. தண்ணீர் சேமித்து வைக்கலாம். ஏரியில் மழைநீர் மற்றும் கிருஷ்ணா நதி நீர் பங்கீடு திட்டத்தின்படி ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து பெறப்படும் தண்ணீரை சேமித்து வைத்து தேவைப்படும் போது புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு திறந்து விடப்படுவது வழக்கம்.

கிருஷ்ணா நதி நீர் பங்கீடு திட்டத்தின்படி கடந்த செப்டம்பர் 23ந் தேதி முதல் கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதேபோல் பூண்டி ஏரி நீர் பிடிப்பு பகுதியில் அவ்வப்போது பலத்த மழை கொட்டி வருகிறது.

இதனால் தற்போது பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இன்று காலை நிலவரப்படி ஏரிக்கு மழை நீர் 260 கன அடி, கிருஷ்ணா நீர் 200 கன அடி என மொத்தம் வினாடிக்கு 460 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. ஏரியில் மொத்த கொள்ளளவான 3231 மில்லியன் கனஅடியில் 465 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

பூண்டி ஏரியில் இருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு இணைப்பு கால்வாய் வழியாக வினாடிக்கு 350 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

அதே போல் சென்னை குடிநீர் வாரியத்துக்கு பேபி கால்வாய் வழியாக வினாடிக்கு 17 கன அடி தண்ணீர் அனுப்பப்படுகிறது. செப்டம்பர் 23ந் தேதியிலிருந்து இன்று காலை வரை கிருஷ்ணா நீர் 1.237 டி.எம்.சி. வந்து சேர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் நேற்றும் பரவலாக மழை கொட்டியது.

# முன்விரோதத்தில் கட்டிட தொழிலாளி அடித்துக்கொலை



இரணியல், நவ.17

இரணியல் அருகே கண்டன்விளை பாலவிளை பகுதியை சேர்ந்தவர் ஜெயன் (வயது 44), கட்டிட தொழிலாளி. கண்டன்விளையை சேர்ந்தவர் ராஜாசிங் (32). வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறார்.

இவர்கள் இருவரும் நண்பர்கள். இவர்கள் இருவருக்கும் இடையே கடந்த மாதம் 6ந்தேதி அந்த பகுதியில் உள்ள ஆலயத்தில் வைத்து தகராறு ஏற்பட்டது. அப்போது அவர்களை சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர். இந்த நிலையில் மறுநாள் ஜெயன் கடைக்கு சென்றபோது ராஜாசிங் அவரிடம் தகராறில் ஈடுபட்டதாக தெரிகிறது.

ஜெயன் மீது ராஜாசிங் இரணியல் போலீசில் புகார் செய்தார். போலீசார் இருவரையும் அழைத்து சமரசம் செய்து அனுப்பி வைத்தனர். இந்த நிலையில் ஜெயன் கட்டிட வேலைக்காக கேரளாவுக்கு சென்றார். வேலைக்கு சென்ற ஜெயன் தற்பொழுது ஊருக்கு வந்துள்ளார்.

ஜெயன் கண்டன்விளை மீன் மார்க்கெட் பகுதியில் நின்று கொண்டு இருந்தார். அப்போது அங்கு வந்த ராஜா சிங், ஜெயனிடம் தகராறில் ஈடுபட்டார். அவர்களுக்கு இடையே வாய் தகராறு ஏற்பட்டதுடன் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

வீட்டிற்கு சென்ற ராஜா சிங் கம்பியை எடுத்து வந்து ஜெயனை சரமாரியாக தாக்கினார். இதில் ஜெயனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு ரத்தம் கொட்டியது. சம்பவ இடத்திலேயே ஜெயன் பரிதாபமாக இறந்தார்.

இதையடுத்து ராஜாசிங் அங்கிருந்து தப்பி சென்று விட்டார். இதுகுறித்து இரணியல் இன்ஸ்பெக்டர் செந்தில்வேல் குமாருக்கு தகவல் கிடைத்தது. போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பிணமாக கிடந்த ஜெயனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து ஜெயனின் மனைவி ஜெமிலா இரணியல் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் ராஜா சிங் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரை தேடி வந்தனர். இந்த நிலையில் இன்று காலை ராஜாசிங்கை போலீசார் கைது செய்தனர்.

பின்னர் அவரை இரணியல் போலீஸ் நிலையத்திற்கு கொண்டு வந்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். கொலை செய்யப்பட்ட ஜெயனின் உடல் பிரேத பரிசோதனை இன்று ஆசாரிப்பள்ளம் ஆஸ்பத்திரியில் நடக்கிறது.

அவரது உறவினர்கள் ஏராளமானோர் அங்கே திரண்டு உள்ளனர். கொலை செய்யப்பட்ட ஜெயனுக்கு ஜெமிலா என்ற மனைவியும், 2 குழந்தைகளும் உள்ளனர்.

கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ராஜாசிங் போலீசாரிடம் கூறுகையில், நானும் கொலை செய்யப்பட்ட ஜெயனும் நண்பர்கள். நாங்கள் அடிக்கடி ஒன்றாக மது அருந்துவது வழக்கம். கடந்த மாதம் மது அருந்திகொண்டிருந்தபோது எனது தாயாரை பற்றி ஜெயன் அவதூறாக பேசினார். இதனால் எனக்கும், அவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அவருடன் இருந்த நட்பை துண்டித்தேன். தொடர்ந்து எனது தாயாரை அவதூறாக பேசி வந்தார். நேற்று ஜெயன் அவதூறாக பேசியதால் ஏற்பட்ட ஆத்திரத்தில் அவரை கொன்றேன் என்றார்.

தினகனி



# விஜய் போன்று அரசியலுக்கு வந்தவன் நான் சரத்குமார்

சென்னை, நவ.17

நடிகரும் மூத்த அரசியல்வாதியுமான சரத்குமார் கூறியதாவது:

★ விஜய் கூறியது போல் நானும் உச்சநடிகராக இருக்கும் பொழுது தான் அரசியலுக்கு வந்தேன்.

★ மக்கள் சேவைக்காக நான் அரசியலுக்கு வந்தேன். மாபெரும் தலைவர்களை எதிர்த்து அரசியல் செய்தேன். எதுவும் சாத்தியம்.

★ நீட் தேர்வு, ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து புரிதல் இல்லாததால் தான் அவற்றை வேண்டாம் என விஜய் பேசி உள்ளார்.

★ அம்பேத்கரை கொள்கை தலைவராக வைத்த விஜய் அரசியல் சாசனத்தில் உள்ள கவர்னர் பதவியை எப்படி வேண்டாம் என சொல்கிறார் என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

# வேளாண் நில கணக்கெடுப்புக்கு மாணவிகளை பயன்படுத்தியது கண்டிக்கத்தக்கது பிரேமலதா

சென்னை, நவ.1&

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசு வேளாண் நிலம் மற்றும் பயிர் இவைகளை டிஜிட்டல் முறைப்படுத்தும் தமிழக அரசின் செயல் திட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் இவர்கள் செய்ய வேண்டிய வேலையை எந்தவிதமான பாதுகாப்பு நடவடிக்கையும் இல்லாமல் அலட்சியப்போக்கோடு வேளாண் கல்லூரி மாணவர்களை ஈடுபடுத்தப்படுவது கண்டனத்திற்குரியது.

இந்த பணியில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தபோது இரண்டு மாணவிகளை பாம்பு கடித்த நிலையில் மீண்டும் மாணவர்கள் டிஜிட்டல் சர்வே செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி அரசின் அலட்சிய போக்கையும், மாணவர்கள் மீது அவர்களுக்கு அக்கறை இல்லாததையும் காட்டுகிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஆள்மாறாட்டம் செய்து நிலம் மோசடி பெண்கள் உள்பட 5 பேர் கைது



கோவை, நவ.17

கோவை ராமநாதபுரத்தை சேர்ந்தவர் ஜெகதீசன் என்பவரின் மகன் விஜயகுமார் (50).

இவர் கடந்த 2006ம் ஆண்டு பாக்கியம் என்பவரிடமிருந்து 2.4 சென்ட் இடத்தை வாங்கினார்.

தொடர்ந்து அந்த இடத்தில் அவர் என்ஜினியரிங் நிறுவனம் ஒன்றை கட்டி நடத்தி வருகிறார். கடந்த ஆண்டு அந்த நிறுவனத்தில் அவரது சகோதரர் வேணுகோபால் இருந்தார். அந்த சமயத்தில் அங்கு முபாரக் அலி என்பவர் வந்தார். அவர் தான் ரியல் எஸ்டேட் அதிபர் என்றும், விஜயகுமாரின் நிறுவனம் உள்ள இந்த இடத்தை தான் வாங்கி இருப்பதாகவும், அதனால் நீங்கள் இடத்தை காலி செய்யும்படியும் கூறினார்.

இதை கேட்டு அதிர்ச்சியான வேணுகோபால் இதுகுறித்து தனது சகோதரரிடம் தெரிவித்தார். இந்த நிலையில் சில நாட்கள் கழித்து, விஜயகுமாருக்கு ஒரு அழைப்பு வந்தது.

அதில் பேசிய நபர், தற்போதைய மார்க்கெட் விலை எவ்வளவோ, அதன்படி நீங்கள் பணத்தை கொடுத்தால், அந்த இடத்தை உங்களுக்கே கிரையம் செய்து கொடுத்து விடுவதாக தெரிவித்தார். இதைக் கேட்டு அதிர்ச்சியான விஜயகுமார், பத்திரப்பதிவு அலுவலகத்தில் சான்றிதழை வாங்கி பார்த்தார்.

அப்போது, கடந்த 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 22ந் தேதி பாக்கியம் என்பவரிடமிருந்து முபாரக் அலி அந்த இடத்தை கிரையம் பெற்றிருப்பதாக இருந்த து. இதையடுத்து அவர் மாநகர குற்றப்பிரிவு போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் விசாரணை நடத்தினர்.

விசாரணையில், விஜயகுமாருக்கு இடத்தை விற்ற பாக்கியம் என்பவர் கடந்த ஆண்டு இறந்து விட்டார். அதன்பிறகு இறந்து போன பாக்கியத்திற்கு பதில் சிவபாக்கியம் என்ற பெண்ணின் பெயரில் போலி ஆதார், வாக்காளர் அடையாள அட்டை தயாரித்து, ஆள்மாறாட்டம் செய்து, விஜயகுமாரின் நிலத்தை அபகரிக்க முயன்றது தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் ஆள்மாறாட்டம் செய்து நில மோசடியில் ஈடுபட்ட கோவையை சேர்ந்த முபாரக் அலி( 50), பாப்பநாயக்கன்பாளையத்தை சேர்ந்த பாக்கியம் (66), கணபதி கே.ஆர்.ஜி நகர் கவுதமன்(29) கோவை தெற்கு உக்கடம் நிஷார் அகமது(34) கோவை காந்திபுரம் 7வது வீதியை சேர்ந்த சாந்தி(44 ) ஆகிய 5 பேரையும் கைது செய்தனர். பின்னர் அவர்களை கோர்ட்டில் ஆஜர்படுத்தி ஜெயிலில் அடைத்தனர்.

# நல்லது செய்யும் எண்ணமே இல்லை தி.மு.க., அ.தி.மு.க.வை சாடிய ஐகோர்ட் நீதிபதி



மதுரை, நவ.17

மதுரையில் நடைபெற்ற கூட்டத்தில் முதலமைச்சருக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் பேசியதாக அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. மதுரை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வர உள்ள வழக்கை ரத்து செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் செல்லூர் ராஜூ மனுதாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு இன்று நீதிபதி வேல்முருகன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது செல்லூர் ராஜூ தரப்பில், எதிர்க்கட்சி எம்எல்ஏ என்ற அடிப்படையில் தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றினேன். முதலமைச்சரின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் பேசவில்லை. தனது கருத்தை மட்டுமே தெரிவித்ததாக வாதிடப்பட்டது. ஆனால் முதலமைச்சரின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் செல்லூர் ராஜூ பேசுவதால் அவர் வழக்கை எதிர்கொள்ள வேண்டும். அதனால் வழக்கை ரத்து செய்யக்கூடாது என்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிபதி வேல்முருகன், அதிமுக, திமுக கட்சிகள் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல. இருப்பை தக்கவைத்துக்கொள்ள திமுக, அதிமுக மாறி மாறி குற்றச்சாட்டு கூறி வருகின்றனர். ஜனநாயகத்தை வலுப்படுத்துவதாக கூறிக்கொண்டு குற்றச்சாட்டுகளை கூறுகின்றனரே தவிர நாட்டுக்கு நல்லது செய்யும் எண்ணமில்லை என்று தனது கருத்தை தெரிவித்த நீதிபதி அவதூறு வழக்கை ரத்து செய்வதாக கூறினார்.

# உங்கள் வழக்குகளை மட்டும் விசாரித்தால் போதுமா? வேறு வழக்குகள் இல்லையா? ஐகோர்ட் நீதிபதி கடும் அதிருப்தி



சென்னை, நவ.17

சென்னையில் கடந்த 2022ம்ஆண்டுஅ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் நடைபெற்ற போது கட்சி அலுவலகத்துக்குள் அத்து மீறி நுழைந்து ஆவணங்களை எடுத்துச் சென்றதாக ஓ.பன்னீர்செல்வம் தரப்பினருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்பட்ட நிலையில், விசாரணையில் எந்த முன்னேற்றமும் இல்லாததால் விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டும் என்று அ.தி.மு.க. சார்பில் சி.வி.சண்முகம் எம்.பி. சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி வேல்முருகன் முன்பு இன்று விசாரணைக்கு வந்த போது, காவல்துறை தரப்பில், இந்த வழக்கு தொடர்பாக 114 ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு, சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதாகவும், அந்த ஆவணங்களின் நகல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் 300க்கும் மேற்பட்டோர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே 100 பேருக்கு மேல் முன்ஜாமின் பெற்று உள்ளதாகவும் குறிப்பிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர், புலன் விசாரணை முன்னேற்ற கதியில் நடந்து வருகிறது. விரைந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அப்போது, தர்மபுரி பஸ் எரிப்பு சம்பவத்தை சுட்டிக்காட்டிய நீதிபதி, கல்லூரி மாணவிகளை மனசாட்சி இல்லாமல் எரித்த கட்சியினர் தற்போது தண்டனை குறைப்பு பெற்று விடுதலையாகி அவர்களுக்கு தியாகி பட்டம் கொடுத்தது இங்குதான் நடக்கிறது.

இரண்டு கட்சியினருக்கும் (தி.மு.க.அ.தி.மு.க.) மக்களைப் பற்றி அக்கறை இல்லை. உங்கள் சொந்தக் கட்சியை பற்றி மட்டும் தான் அக்கறை இருக்கிறது. உங்கள் வழக்குகளை மட்டும் விசாரித்தால் போதுமா? வேறு வழக்குகள் இல்லையா? என நீதிபதி சரமாரியாக கேள்வி எழுப்பினார்.

மேலும், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதே காவல்துறையினர் தான் பணியில் இருக்கிறார்கள். தேவையில்லாமல் காவல்துறையினரை குற்றம் சாட்டுவதாக அதிருப்தி தெரிவித்த நீதிபதி, இந்த வழக்கை பொறுத்தவரை சம்பவம் நடந்து 2 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், சி.பி.சி.ஐ.டி. போலீசார் விரைந்து விசாரணையை முடித்து குற்றபத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

## விஜய் சேதுபதி நடிக்கும் 'டிரெயின்' படத்தின் ரிலீஸ் அப்டேட்





கலைப்புலி எஸ் தாணுவின் வி. கிரியேஷன்ஸ் தயாரிப்பில் மிஷ்கின் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிக்கும் 'டிரெயின்' படத்தின் படப்பிடிப்பு சில மாதங்களுக்கு முன் துவங்கியது. ஒரே இரவில் ரெயிலில் நிகழும் சம்பவமாக இப்படம் உருவாகி வருவதாகத் தகவல். நடிகர் விஜய் சேதுபதி முதன்முறையாக இயக்குநர் மிஷ்கினுடன் கைகோர்த்துள்ள படமென்பதால் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

படத்தில் வினய் ராய், பாவனா, சம்பத் ராஜ், பப்லு பிருத்விராஜ், கே.எஸ்.ரவிக்குமார், யூகி சேது, கணேஷ் வெங்கட்ராமன், கனிஹா, தியா சீதிபள்ளி, சிங்கம் புலி, ஸ்ரீரஞ்சனி, அஜய், அருண் ஆகியோர்நடித்து வருகின்றனர். டெவில் படத்திற்கு பிறகு இந்தப் படத்திற்கு இயக்குநர் மிஷ்கினே இசையமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. டார்க் திரில்லர் ஜானரில் உருவாகும் இந்த படத்தின் படப்பிடிப்புகளும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தொடங்கப்பட்டு விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது.

இந்நிலையில் இந்த படமானது அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் திரைக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டு வருவதாக புதிய தகவல் வெளியாகியுள்ளது.

மிஷ்கின் இயக்கத்தில் முன்னதாக உருவாகியுள்ள 'பிசாசு 2' படத்திற்கு முன்னதாக 'டிரெயின்' படம் வெளியாகும் என்று கூறப்பட்டுள்ளது.

## நயன்தாராவுக்கு குவியும் நடிகைகளின் ஆதரவு



தமிழ் திரையுலகில் லேடி சூப்பர் ஸ்டாராக கொடி கட்டி பறப்பவர் நடிகை நயன்தாரா. இவரும் பிரபல இயக்குனர் விக்னேஷ் சிவனும் காதலித்து கடந்த 2022ம் ஆண்டு மாமல்லபுரத்தில் திருமணம் செய்து கொண்டனர்.அந்த திருமணம் ஒரு ஆவணப்படமாக எடுக்கப்பட்டது.இதற்கு'நயன்தாரா:பியாண்ட்திபேரிடேல்'என்றுதலைப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆவணப்படம் வருகிற 18ந் தேதி நெட்பிளிக்ஸ் ஓ.டி.டி தளத்தில் வெளியாக உள்ளது.

இது இவரது சிறுவயது வாழ்க்கை முதல் முன்னணி கதாநாயகியாக உயர்ந்தது வரை உள்ள சம்பவங்களை தொகுத்து ஒரு ஆவணப்படம் தயாராகி உள்ளது. இந்த ஆவணப்படத்தின் ஒரு பகுதியில் நயன்தாரா தனது காதல் வாழ்க்கைப் பற்றிய காட்சிகள் இடம்பெற்றுள்ளன. விக்னேஷ் சிவன் இயக்கி நயன்தாரா நடித்த 'நானும் ரவுடிதான்' படத்தின் போதுதான் இருவருக்கும் காதல் மலர்ந்தது. இதனால் அந்த படத்தின் படப்பிடிப்பு வீடியோக்களை பயன்படுத்திக்கொள்ள தனுஷிடம் அனுமதி கேட்டுள்ளனர். இரண்டு ஆண்டுகள் கழித்தும் தனுஷ் அனுமதி வழங்கவில்லை.

எனவே, நயன்தாராவின்தனிப்பட்ட செல்போனில் எடுக்கப்பட்ட காட்சியை ஆவணப்படத்தில் பயன்படுத்தியதற்காக ரூ.10 கோடி நஷ்ட ஈடு கேட்டு தனுஷ் நோட்டீஸ் அனுப்பியுள்ளதையும் நயன்தாரா தெரிவித்துள்ளார். எனவே நடிகர் தனுஷ் மீது நடிகை நயன்தாரா பரபரப்பு குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார். நயன்தாராவைத் தொடர்ந்து இயக்குனர் விக்னேஷ் சிவனும் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதற்கிடையில் தற்போது நயன்தாரா, தனுஷ் மீது பல்வேறு குற்றங்களை அடுக்கியுள்ள நிலையில் தனுஷுடன் மற்ற படங்களில் நடித்த மற்ற நடிகைகளும் நயன்தாராவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள். அதாவது மரியான் படத்தில் தனுஷுடன் நடித்த நடிகை பார்வதி திருவொத்து, நையாண்டி படத்தில் நடித்த நஸ்ரியா , வடசென்னை படத்தில் நடித்த ஐஸ்வர்யா ராஜேஷ், 3 படத்தில் நடித்த ஸ்ருதி ஹாசன், கொடி படத்தில் நடித்த அனுபமா பரமேஷ்வர் , அஞ்சு குரியன் , மஞ்சிமா மோகன் , அதிதி பாலன் உள்ளிட்ட நடிகைகள் நயன்தாராவுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்

## அரசாங்கத்தில் உயர் பதவி வாங்கி தருவதாக கூறி கங்குவா பட நடிகையின் தந்தையிடம் ரூ.25 லட்சம் மோசடி

தெலுங்கில் கடந்த 2015ம் ஆண்டு வெளியான 'லோபர்' திரைப்படத்தில் அறிமுகமானவர் நடிகை திஷா பதானி. தொடர்ந்து 'எம்.எஸ்.தோனி தி அன்டோல்டு ஸ்டோரி' திரைப்படத்தின் மூலம் ரசிகர்களை கவர்ந்த திஷா பதானி, அடுத்தடுத்து பாலிவுட்டில் முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்து வருகிறார். தற்போது சூர்யா நடிப்பில் நேற்று வெளியான 'கங்குவா' திரைப்படம் தமிழ் திரையுலகில் அடியெடுத்து வைத்துள்ளார்.

இந்த நிலையில், நடிகை திஷாவின் தந்தை ஜக்தீஷ் சிங் பதானியிடம் மர்ம நபர்கள் ரூ.25 லட்சம் மோசடி செய்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக பரேய்லி கோட்வாலா காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. அந்த புகாரில், ஓய்வு பெற்ற முன்னாள் எஸ்.பி.யான ஜக்தீஷ் சிங் பதானிக்கு அரசாங்கத்தில் உயர் பதவி வாங்கி தருவதாக கூறி, அவரிடம் 25 லட்சம் பெற்று மோசடி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புகாரின் அடிப்படையில் 5 நபர்கள் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அவர்கள் 5 பேரும் நடிகை திஷா பதானியின் தந்தையிடம், தங்களுக்கு அரசாங்கத்தில் உள்ள உயர் அதிகாரிகள் பலருடன் தொடர்பு உள்ளதாக கூறியுள்ளனர். இதை நம்பி திஷா பதானியின் தந்தை ரூ.25 லட்சத்தை கொடுத்துள்ளார். ஆனால் சுமார் 3 மாதங்களாகியும் அவர்களிடம் இருந்து எந்த பதிலும் வராததால், இது குறித்து அவர் போலீசில் புகார் அளித்துள்ளார். இது தொடர்பாக போலீசார் தற்போது தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஏன் பாகிஸ்தானுக்கு வர மறுக்கிறீர்கள்.. பாக்., ரசிகர் கேள்விக்கு பதில் அளித்த இந்திய வீரர்கள்



ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி அடுத்த ஆண்டு பாகிஸ்தானில் நடைபெற உள்ளது, ஆனால் அரசியல் பதற்றம் காரணமாக இந்தியா பாகிஸ்தானுக்கு செல்ல மறுத்துவிட்டது. பாகிஸ்தானுக்கு இந்தியா வரவில்லை என்றால் சாம்பியன்ஸ் டிராபி தொடரை நாங்கள் நடத்தபோவதில்லை என பாகிஸ்தான் கூறி வருகிறது.

இதற்கிடையில் இந்திய அணி தென் ஆப்பிரிக்காவில் 4 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. முதல் 3 போட்டிகள் முடிவில் இந்தியா 21 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இரு அணிகளுக்கு இடையேயான 4வது மற்றும் கடைசி டி20 போட்டி இன்று நடைபெற உள்ளது.

இந்நிலையில் வெளியில் வீடியோ கேம் விளையாடுவதற்காக சூர்யகுமார் யாதவ், ரிங்கு சிங் சென்றனர். இவர்களை பார்த்த பாகிஸ்தான் ரசிகர் ஒருவர், அவர்களிடம், தயவுசெய்து ஒரு விஷயம் சொல்லுங்கள், நீங்கள் ஏன் பாகிஸ்தானுக்கு வரவில்லை என கேள்வி எழுப்பினார். அதற்கு சூர்யகுமார் யாதவ் அது நம் கையில் இல்லை என கூறினார். இதனை வீடியோ எடுத்த பாகிஸ்தான் ரசிகரை ரிங்கு சிங், வீடியோ எடுப்பதை நிறுத்துங்கள் என கூறினார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## லக்னோ அணி உரிமையாளருடன் நடந்த பேச்சுவார்த்தை மவுனம் கலைத்த கே.எல்.ராகுல்



2024 ஐபிஎல் போட்டியில் ஐதராபாத் அணியுடன் 10 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியடைந்த பிறகு, எல்எஸ்ஜி உரிமையாளர் சஞ்சீவ் கோயங்கா மைதானத்தில் கேஎல் ராகுலுடன் கடுமையாக நடந்து கொண்டார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இந்நிலையில் பொதுமக்களின் பார்வையில் சிக்கிய அந்த பேச்சுவார்த்தை குறித்து கேஎல் ராகுல் இறுதியாக தனது மௌனத்தை கலைத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

நாங்கள் ஐந்து ஆட்டங்களில் மூன்று அல்லது கடைசி நான்கு ஆட்டங்களில் இரண்டில் வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிறேன். இது நடந்தபோது, எங்கள் அனைவருக்கும் இது ஒரு பெரிய அதிர்ச்சியாக இருந்தது

விளையாட்டிற்குப் பிறகு மைதானத்தில் என்ன நடந்தாலும் அது ஒரு பகுதியாக இருப்பதற்கான மிகச் சிறந்த விஷயமாகவோ அல்லது கிரிக்கெட் மைதானத்தில் எவரும் பார்க்க விரும்பும் விஷயமாகவோ இல்லை. இது முழு குழுவையும் பாதித்தது என்று நினைக்கிறேன். பிளேஆஃப் சுற்றுக்கு முன்னேற எங்களுக்கு இன்னும் வாய்ப்பு இருந்தது. நாங்கள் ஒரு குழுவாக அரட்டை அடித்து, மீண்டும் ஒருங்கிணைக்க முயற்சித்தோம் எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு, எங்களின் சிறந்த கால்களை முன்னோக்கி வைக்க முயற்சித்தோம். நாங்கள் எங்களால் முடிந்தவரை முயற்சித்தோம், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, எங்களின் சிறந்தவை எப்போதும் போதுமானதாக இல்லை. நாங்கள் எதிர்பார்த்தது போல் எங்களால் பிளேஆஃப்களுக்குச் செல்லவோ அல்லது சீசனை வெல்லவோ முடியவில்லை என்பது வருத்தமாக இருந்தது.

## வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான 3வது டி20 போட்டியிலும் இங்கிலாந்து வெற்றி தொடரையும் கைப்பற்றியது

வெஸ்ட் இண்டீஸ்இங்கிலாந்து அணிகள் மோதிய 3வது 20 ஓவர் போட்டி க்ரோஸ் ஐலெட்டில் இந்திய நேரப்படி இன்று அதிகாலை நடந்தது. இதில் முதலில் பேட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 145 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக கேப்டன் பாவெல் 54 ரன்களும், ஷெபார்ட் 30 ரன்னும் எடுத்தனர். இங்கிலாந்து தரப்பில் சாகிப் மக்மூத், ஜேமி ஓவர்டன் தலா 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர். பின்னர் இலக்கை நோக்கி விளையாடிய இங்கிலாந்து 37 ரன்னுக்கு 3 விக்கெட்டை இழந்தது. அதன்பின் வில் ஜாக்ஸ்(32 ரன்)சாம் கர்ரன்(41 ரன்) ஜோடி சிறப்பாக விளையாடியது. லிவிங்ஸ்டன் 39 ரன்கள் எடுத்து வெற்றிக்கு பங்களித்தார்.

இங்கிலாந்து அணி 19.2 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 149 ரன்கள் எடுத்து 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இங்கிலாந்து ஹாட்ரிக் வெற்றி பெற்று தொடரை பெற்றது. அந்த அணி முதல் 2 போட்டிகளிலும் வெற்றி பெற்றது.

5 போட்டி கொண்ட தொடரில் இங்கிலாந்து 30 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. 4வது போட்டி 17ந்தேதி நடக்கிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.